**IN THE COURT OF III ADHOC JUDGE**

**City Civil Court Chennai -104**

**PW1:N. Parthasarathy. OS. NO:1976/2023. DATE:23.09.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார்.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது என்ன ஆவணம் என்றால் அந்த ஆவணமானது நான் Medikonda Ramakrishna என்பவரிடமிருந்து 18.01.2014 ஆம் தேதி அன்று ரூபாய் 1,35,000 த்தை Security Deposit தொகையாக Demand Draft மூலம் பெற்றுக்கொண்டதற்காக என்னால் வழங்கப்பட்ட receipt ஆகும். அந்த ஆவணமானது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது என்ன ஆவணம் என்றால் அந்த ஆவணமானது நான் Medikonda Ramakrishna என்பவரிடமிருந்து 18.01.2014 ஆம் தேதி அன்று ரூபாய் 15,000 த்தை மாத வாடகையாக பெற்றுக்கொண்டதற்காக என்னால் மேற்படி தேதி அன்று வழங்கப்பட்ட receipt ஆகும். அந்த ஆவணமானது **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவற்றில் M/s. Sri Venkataramana Travels என்ற பெயர் இடம்பெற்றுயுள்ளதா என்றால் இல்லை. சாட்சியானவர்

தாமாகமுன்வந்து மேற்படி இரண்டுஆவணங்களையும் M/s. Sri Venkataramana Travels ன் உரிமையாளர் ஆன Medikonda Ramakrishna என்பவர் தன்னிடம் வாடகை தொகைக்காகவும், security deposit க்காகவும் என்னிடம் தொகை கொடுத்ததற்காக என்னால் மேற்படி ரசீதுகள் வழங்கப்பட்டது என்று கூறுகிறார். M/s. Sri Venkataramana Travels என்ற நிறுவனத்திற்கு Medikonda Ramakrishna என்பவர் தான் உரிமையாளர் ஆவார் என்பதற்கான ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த விவரம் பற்றி எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி M/s. Sri Venkataramana Travels என்ற நிறுவனத்திற்கு Medikonda Ramakrishna என்பவர் தான் உரிமையாளர் ஆவார் என்பதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் வழக்கு விவரங்களை பற்றி நான் சரியான முறையில் விவரம் தெரிந்துக்கொள்ளாதநிலையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் தவறான நபர் மீது இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் அதனால் தாவா வழக்கானது நிலைநிற்கதக்கது அல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைப்பெற்ற வழக்கின் நகலை தாக்கல் செய்துள்ளதில் இவ்வழக்கின் பிரதிவாதியானவர் அந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். சென்னை

உயர்நீதிமன்றத்தில் C.R.P.Nos. 3407.3409,3410,3411, & 3467/2022 and C.M.P. No.18114,18118,18123,18126 and 18491/2022 ஆகிய வழக்குகளில் 09.12.2022 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலை இவ்வழக்கின் பிரதிவாதியிடம் நான் கொடுத்தேனா என்றால் ஆம் கொடுத்தேன். மேற்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலை இவ்வழக்கின் பிரதிவாதிக்கு நான் கொடுக்கவில்லை என்றும், மேற்படி வழக்குகளில் நகலை பிரதிவாதிக்கு கொடுத்ததாக நான் இவ்வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. கட்டிடத்தை இடித்து கட்டுவதற்கு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆம். அதன்படி சென்னை பெருநகரமாநகராட்சியில் தாவா சொத்திலுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தவேண்டும் என்று மனுவை கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. அதற்கு காரணம் இவ்வழக்கின் பிரதிவாதியானவர் மட்டும் தாவா சொத்தில் இருந்து காலி செய்துக்கொடுக்காமல் இருந்துவருகின்றப்படியால் தான் அந்த மனுவை என்னால் பெருநகரமாநகராட்சியிடம் கொடுக்கமுடியாமல் இருந்துவருகிறேன். தாவா சொத்திலுள்ள கட்டிடமானது இடிந்துவிழும் நிலையில் உள்ளது என்பதற்காக பொறியாளரால் வழங்கப்பட்ட உத்தரவை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்குரிய உத்தரவை நான்

R.C.O.P வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாவா கட்டிடமானது இடிந்துவிழக்கூடிய நிலையில் இருந்துவருகிறது என்று பொறியாளரால் வழங்கப்பட்ட அறிக்கையை இவ்வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தால் அதுக்குறித்து குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியானவர் கூறுகிறார். தாவா சொத்திலுள்ள கட்டிடத்தின் புகைப்படத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம் தாக்கல் செய்துள்ளேன். அதற்குரிய ஆவணமானது வா.சா.ஆ.10 ஆக எனது தரப்பில் இவ்வழக்கில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ஆன நோட்டீஸ்யில் Medikonda Ramakrishna என்பவருடன் செய்துக்கொண்ட Tenancy யை நான் Terminate செய்துவிட்டேன் என்பது பற்றி அதில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சியானவர் தாமாகமுன்வந்து அந்த விவரத்தை பற்றி சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் சொல்லப்பட்டுள்ளதாக கூறுகிறார். சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் இவ்வழக்கின் பிரதிவாதியானவர் தரப்பினராக கிடையாது என்றும், அதனால் மேற்படி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது இவ்வழக்கின் பிரதிவாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது

என்று சொன்னால் அது சரியல்ல. இன்றைய தேதிவரையிலும் பிரதிவாதியுடன் செய்துக்கொண்ட Tenancy ஆனது ஊர்ஜிதத்தில் தான் இருக்கிறது என்றும், அதனால் அந்த Tenancy ஆனது இன்றுவரையிலும் Terminate ஆகவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. இன்றுவரையிலும் பிரதிவாதி கொடுத்த Security Depoist தொகையான ரூபாய்1,50,000 ஆனது என்னிடம் தான் இருக்கிறது என்றால்சரிதான். அதனை பிரதிவாதியானவர் தாவா சொத்தில் இருந்து காலி செய்து வெளியயேறியப்பின்பு அந்த தொகையை அவரிடம் நான் எங்களுக்கு கொடுக்கவேண்டிய தொகை எதுவும் பாக்கி இல்லை என்றால் அவரிடம் அந்த தொகையை நான் கொடுத்துவிடுவேன். மேற்சொன்னவாறு என்னால் சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளதை பற்றி எனது வழக்குரையிலும், எனது சத்தியபிரமாணவாக்குமூலத்திலும் என்னால் கருத்துக்கள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. கோவிட்–19 தொற்றுபரவல் காலத்தில் எல்லா கடைகளும் மூடியிருந்ததுப்போன்று தாவா சொத்திலுள்ள கட்டிடமும் மூடியிருந்தது என்றால் சரிதான். பிரதிவாதியானவர் தாவா சொத்திற்கு செலுத்தவேண்டிய வாடகை தொகையை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி 2023 ஆம் ஆண்டில் இருந்து செலுத்திவருகிறாரா என்றால் அது பற்றி அதற்குரிய ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் பதில் சொல்லஇயலும். தாவா வழக்கு பற்றிய முழுவிவரங்களும்

எனக்கு தெரியாதநிலையில் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தாவா சொத்தின் உரிமையாளரான N. Vijayalakshmi என்பவர் தாவா சொத்துக்குறித்து எந்த விவரங்களும் எனக்கு கொடுக்கவில்லை என்றும், அதனால் தாவா சொத்து பற்றிய விவரம் தெரியாதநிலையில் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. கோவிட்–19 காலத்திற்கு பின்பு பிரதிவாதியானவர் இன்றைய தேதிவரையிலும் உள்ள வாடகை தொகையை சரியானமுறையில் தான் கொடுத்துவருகிறார் என்றும் இவ்வழக்கிற்காக வேண்டி பிரதிவாதியானவர் தாவா சொத்திற்குரிய வாடகை தொகையை சரியானமுறையில் கொடுக்கவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா வழக்கான O.S.No.1976/2023 என்ற இந்த வழக்கை தவிர இந்த வழக்கின் பிரதிவாதிமீது தாவா சொத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் வழக்குகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கானது தாவா சொத்திற்குரிய வாடகை தொகையை பிரதிவாதி எங்களுக்கு செலுத்தவேண்டும் என்றும், தாவா கட்டிடத்தில் இருந்து பிரதிவாதியை வெளியேற்றுவதற்கு உத்தரவு இடவேண்டும் என்றும் பரிகாரம் கேட்டு இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பிரதிவாதியானவர் மனுதாரராக இருந்து I.A.No.4/2023 என்ற மனுவை இந்நீதிமன்றத்தில்

தாக்கல் செய்து தாவா சொத்திற்குரிய வாடகை தொகையான ரூபாய் 20,000 த்தை வைப்பீடு செய்யவேண்டும் என்று தாக்கல் செய்திருந்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் ஆகஸ்ட் மாதம் 2023 ல் இருந்து ஜனவரி மாதம் 2024 வரையிலும் உள்ள வாடகை தொகையை வைப்பீடு செய்யவேண்டும் என்று மேற்படி மனுவில் 21.02.2024 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது என்றும், அதற்குரிய ஆவணம் தான் வா.சா.ஆ.9 ஆகும் என்றும் சாட்சியானவர் கூறுகிறார். நான் பிரதிவாதியை தாவா சொத்தில் இருந்து வெளியேற்றவேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்திற்காக பிரதிவாதி என்னிடம் கொடுத்த வாடகை தொகையை நான் வேண்டும் என்ற வாங்க மறுத்துவிட்டேன் என்றும் அதனால் தான் இவ்வழக்கின் பிரதிவாதியானவர் மேற்படி I.A.No.4/2023 என்ற மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்து உத்தரவைப்பெற்று தாவா சொத்திற்குரிய வாடகை தொகையை இன்றுவரையிலும் செலுத்திவருகிறார் என்றும் சொன்னால் அது தவறாகும். பிரதிவாதியானவர் செலுத்துகின்ற வாடகை தொகையை N.Vijayalakshmi ஆன வாதி பெயரிலுள்ள வங்கி கணக்கில் தான் செலுத்திவருகிறார் என்றால் சரிதான். வாதி N.Vijayalakshmi என்பவருடைய வங்கி கணக்கு விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஆம் தெரியும். அதற்குரிய விவரத்தை பற்றி சொல்லமுடியுமா என்றால் அதற்குரிய ஆவணங்களை பார்த்தால்

தான் சொல்லமுடியும். அதனால் நான் N.Vijayalakshmi பெயரிலுள்ள எந்த ஆவணத்தையும் பார்க்காதநிலையில் வந்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதி N.Vijayalakshmi என்பவருடைய வங்கி கணக்கு புத்தகம் யாரிடம் இருக்கிறது என்றால் தற்போது வங்கியின் கணக்குகள் Online ல் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளப்படியால் வங்கி கணக்கிற்காக புத்தகம் வழங்கப்படுவது இல்லை. N.Vijayalakshmi என்பவருடைய வங்கி கணக்கு விவரத்தை online மூலம் பதிவிறக்கம் என்னால் செய்யஇயலுமா என்றால் அவர் எனக்கு அனுமதிக்கொடுத்தால் என்னால் செய்யமுடியும். இன்றைய தேதிவரையிலும் வாதி N.Vijayalakshmi என்பவர் அதுப்போன்ற அனுமதியை எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அதுப்போன்ற அனுமதியை எனக்கு அவர் கொடுத்துள்ளார். மேற்படி N.Vijayalakshmi என்பவர் எனக்கு அனுமதிக்கொடுத்தார் என்பதற்குரிய ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு காரணம் எப்போது தேவையோ அப்போது அதற்குரிய அனுமதியை வாதி N.Vijayalakshmi என்பவர் வாய்மொழியாக எனக்கு கொடுப்பார். வாதி N.Vijayalakshmi என்பவர் கடைசியாக என்னிடம் எப்போது தொலைப்பேசியில் பேசினார் என்றால் நேற்றுக்கூட பேசினார். வாதி N.Vijayalakshmi என்பவர் நேற்று என்னிடம் பேசியப்போது அவர் வங்கி கணக்கு சம்பந்தமாக பேசினாரா என்றால் அது பற்றி

என்னிடம் பேசவில்லை. நேற்று வாதி N.Vijayalakshmi என்பவருக்கு பிறந்தநாள் ஆகும். அது சம்பந்தமாக அவர் என்னிடம் பேசினார். வாதி N.Vijayalakshmi என்பவரின் வங்கி கணக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்பதால் பிரதிவாதியானவர் வாதி N.Vijayalakshmi என்பவரின் வங்கி கணக்கில் வாடகை தொகையை செலுத்திவருகின்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. மாத வாடகையை வாங்குவதற்கு நான் வாடகை ரசீது கொடுக்கும் பழக்கம் உண்டா என்றால் வாடகைதாரர்கள் வாடகை தொகையை வங்கியில் செலுத்திவிடுவார்கள். அதனால் அவர்கள் என்னிடம் வாடகைரசீதை வாங்குவதற்கு வருவது இல்லை. வாடகைதாரர்கள் வாடகை ரசீதை வாங்கவில்லை என்றால் நாங்கள் வாடகை தாரர்களுக்கு வாடகை ரசீதை போட்டுக்கொடுப்பது இல்லை. வாடகைதாரர்கள் வந்து கேட்டால் அவர்கள் வங்கியில் வாடகை தொகையை வாதி பெயருக்கு செலுத்தியிருந்தால் நாங்கள் வாடகை ரசீதை போட்டுக்கொடுப்போம். பிரதிவாதியானவர் எங்களிடம் வாடகை தொகையை செலுத்தியப்போதும் நாங்கள் தான் பிரதிவாதிக்கு வாடகைரசீதை கொடுப்பதில்லை என்று சொன்னால் தாவா கட்டிடத்திற்குரிய வாடகை தொகையை பிரதிவாதியானவர் வரையோலை மூலம் கொடுத்துக்கொண்டியிருந்தப்போது அப்போது வாடகைரசீது எங்களால் கொடுக்கப்பட்டது. அதன்பிறகு

பிரதிவாதியானவர் வாடகை தொகையை வங்கியில் வாதியின் வங்கி கணக்கில் செலுத்துவதாலும் வாடகைதாரரர்கள் வாடகை ரசீதை கேட்டு எங்களிடம் வராததாலும் நாங்கள் வாடகை ரசீதை அவர்கள் கேட்டு வந்தால் கொடுப்போம். வாடகை தொகையை நாங்கள் ரொக்கமாகவும், காசோலையாகவும், வரையோலையாகவும் பிரதிவாதியிடமிருந்து வாங்கியிருக்கிறோம் என்றும், அதற்காக வாடகை ரசீதை பிரதிவாதிக்கு நாங்கள் கொடுத்தது கிடையாது என்றும் சொன்னால் பிரதிவாதி எங்களிடம் வாடகை தொகையை ரொக்கமாக கொடுத்தது இல்லை. அவர் வாடகை தொகையை காசோலையாகவும், வரையோலையாகவும் வாதி N.Vijayalakshmi என்பவர் பெயரில் கொடுப்பார். அந்த சமயத்தில் பிரதிவாதியானவர் வாடகை ரசீதை கேட்டால் நாங்கள் அவருக்கு கொடுத்திருக்கிறோம். வாடகைதாரர்கள் வாடகை தொகையை செலுத்தியதற்கு நாங்கள் வாடகை ரசீதை கொடுத்ததற்குரிய counter file ஐ இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்தை பொருத்து வாடகை தொகையை 2018 ஆம் ஆண்டில் இருந்து தான் பிரதிவாதியானவர் வாதியின் பெயரில் உள்ள வங்கி கணக்கில் செலுத்திவருவதாலும், பிரதிவாதியானவர் எங்களிடம் வாடகை ரசீது வேண்டும் என்று கேட்காததாலும், வாடகை ரசீதுக்குரிய counter file ஐ இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வாதி வங்கியில் வாடகை தொகை

செலுத்தியதற்குரிய Statement of Accounts ஐ இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியிடமிருந்து ஆரம்பகாலத்தில் இருந்து தாவா சொத்திற்குரிய வாடகை தொகையை ரொக்கமாகவும், காசோலையாகவும், வரையோலையாகவும் வாங்குவது வழக்கம் என்றும், அவ்வாறு வாடகை தொகையை நாங்கள் பெற்றுக்கொண்டுவிட்டு பிரதிவாதிக்கு வாடகை ரசீதை கொடுப்பதில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. எந்த காலத்திலும் வாடகை தொகையை பிரதிவாதியிடமிருந்து நாங்கள் ரொக்கமாக வாங்கியதும் இல்லை, அவர் கொடுத்ததும் இல்லை. பிரதிவாதி எங்களிடம் காசோலை மற்றும் வரையோலை மூலம் வாடகை தொகையை கொடுத்ததற்கு நாங்கள் வாடகை ரசீதை கொடுத்திருக்கிறோம். 2018 ஆம் ஆண்டிற்கு முன்பாக பிரதிவாதிக்கு அவர் வாடகையை தொகையை கொடுத்ததற்காக வாடகை ரசீதை நாங்கள் அவருக்கு கொடுத்திருக்கிறோம். அந்த வாடகை ரசீதுக்குரிய counter file ஐ இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த counter file ஐ இவ்வழக்கில் தாக்கல் செய்யசொன்னால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஏன் counter file ஐ இன்றைய தேதிவரையிலும் நான் எனது தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இனிவரும் காலங்களில் அந்த counter file ஐ தயார் செய்து, ஜோடித்து என்னால் தாக்கல் செய்யமுடியும் என்பதால் தான் வாடகை ரசீதுக்குரிய counter file ஐ இவ்வழக்கில் தாக்கல்

செய்யசொன்னால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று முன்கூட்டியே முன்யோசனையிட்டு, எனது சாட்சியத்தை இவ்வழக்கில் நான் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் ஏப்ரல் 2020 முதல் ஜனவரி 2023 வரையிலும் உள்ள தாவா சொத்திற்குரிய மாதவாடகை தொகையான ரூபாய் 20,000 த்தை கணக்கீடு செய்து ரூபாய் 6,80,000 த்தை பிரதிவாதி இவ்வழக்கின் வாதிக்கு கொடுக்கவேண்டும் என்று மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 நோட்டீஸ் வந்தப்பிறகு பிரதிவாதியானவர் எங்களிடம் வந்து பேசினார் என்றும், அதற்கு நாங்கள் அவரிடம் உங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினால் தான் மற்ற கட்டிட உரிமையாளர்களுக்கு ஒரு பயம் ஏற்படும் என்று பிரதிவாதியிடம் நாங்கள் சொன்னாம் என்றும் சொன்னால் அது சரியல்ல. வா.சா.ஆ.6 ஐ பிரதிவாதிக்கு அனுப்பிவைத்த சமயத்தில் மற்ற கட்டிடத்தில் வாடகைக்கு இருந்த வாடகைதாரர்கள் அவற்றில் அவர்கள் அனுபவத்தில் இருந்தார்களா என்றால் அதற்குரிய ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் பதில் சொல்லஇயலும். ஒரு வழக்கில் சாட்சியம் அளிக்க வரும்போது அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தப்பின்பு தான் அந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவரவேண்டும் என்ற விவரம்

பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் தாவா வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்வையிடாமல் தாவா வழக்கில் நான் ஆஜர் ஆகி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா வழக்கை பற்றிய ஆவணங்களை நான் சரியான முறையில் பார்வையிடாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதற்கு காரணம் தாவா சொத்தை பொருத்து நான் மூன்றாம் நபர் ஆவேன் என்பதால் தான் தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்வையிடாதநிலையில் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவாறகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களில் சொத்துவிவரபட்டியல் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாதி N.Vijayalakshmi என்பவர் எனக்கு கொடுத்த அதிகார பத்திரமானது இன்றைய தேதி வரையிலும் நடைமுறையில் இருந்துவருகிறது என்பதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் இவ்வழக்கில் வாதி N.Vijayalakshmi என்பவருக்காக நான் சாட்சியம் அளிக்கஇயலாது என்றும், அதன் அடிப்படையில் தாவா வழக்கானது நிலைநிற்கதக்கது அல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. சாட்சியானவர் தாமாகமுன்வந்து வாதி N.Vijayalakshmi என்பவர் தன்பெயருக்கு பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி பத்திரத்தை

எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அந்த பத்திரமானது செல்லுப்படியாகக்கூடியது என்றும், அதனை இவ்வழக்கில் தான் சான்று ஆவணமாக தாக்கல் செய்துள்ளதாகவும் கூறுகிறார். பிரதிவாதியின் பெயரை கலங்கம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திலும், பிரதிவாதியின் வியாபாரத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திலும் செயல்பட்டுதான் தாவா வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது சரியல்ல. பிரதிவாதியானவர் இன்றைய தேதிவரையிலும் எங்களுக்கு செலுத்தவேண்டிய வாடகை தொகையை பாக்கியில்லாமல் செலுத்திவருகிறார் என்று சொன்னால் அதற்குரிய ஆவணங்களை பார்த்தால் தான் என்னால் பதில் சொல்லமுடியும். சாட்சியானவர் தாமாகமுன்வந்து ரூபாய் 6,80,000 வாடகை பாக்கி தொகைக்காக தான் அதை கேட்டு இவ்வழக்கை பிரதிவாதிக்கு எதிராக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட IA.No.4/2023 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி பிரதிவாதியானவர் சரியானமுறையில் தாவா சொத்திற்குரிய வாடகை தொகையை செலுத்திவருகிறாரா என்பது பற்றி அதற்குரிய ஆவணங்களை பார்வையிட்டப்பின்பு தான் தன்னால் அதுக்குறித்து பதில் சொல்லஇயலும் என்று கூறுகிறார். பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்தவேண்டிய வாடகை தொகையை பாக்கியில்லாமல்

செலுத்திவருகிறார் என்றும், எனவே இவ்வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரங்களான வெளியேற்றுகை பரிகாரமும், தாவா சொத்திற்குரிய வாடகை பாக்கி தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்திவைப்பதற்கு உத்தரவு இடவேண்டும் என்று இவ்வழக்கில் வாதி கேட்டுள்ள பரிகாரங்களானது வாதிக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. ரூபாய் 6,80,000 வாடகை பாக்கி தொகையை பிரதிவாதியானவர் வாதியிடம் வைக்கவில்லை என்றும், பிரதிவாதியானவர் தாவா சொத்திற்குரிய வாடகை பாக்கி எதுவும் வைக்கவில்லை என்றும், பிரதிவாதியானவர் வாதிக்கு வாடகை பாக்கி தொகையாக ரூபாய் 6,80,000 கொடுப்பதற்கு உத்தரவு இடவேண்டும் என்று தவறான சங்கதிகளை தெரிவித்து இவ்வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தாவா வழக்கானது தள்ளுப்படி செய்யப்படவேண்டிய வழக்காகும் என்றும் சொன்னால் அது சரியல்ல. வாதி N.Vijayalakshmi என்பவருடைய வங்கி கணக்கு விவரங்களை பற்றி எனக்கு தெரியாது என்றும், வாதியின் வங்கி கணக்கை நான் பார்த்ததில்லை என்றும், அவ்வாறு வாதியின் வங்கி கணக்கை பார்வையிடாமல் என்னால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இயலாது என்றும், அதனால் தாவா சொத்தை பொருத்து நான் மூன்றாம் நபர் என்பதால் எனது சாட்சியமானது

ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியம் கிடையாது என்றும் சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**